உறுப்பினர்களாக்கி, அவர்களுக்குக் குறைந்த விலையில் நூல் கிடைக்க ஏற்பாடு செய்யவேண்டும். நம்முடைய சத்தியமங்கலம் தொகுதி சட்டப்பேரவை உறுப்பினர் இன்றைக்கு அணிந்து வந்திருக்கிறாரே அதுதான் சீக்கோ சேலை. அப்படிப்பட்ட சேலைகளை எல்லாம் இன்றைக்கு குறைந்த விலையில் உற்பத்தி செய்து, நெசவாளர்கள் அதிக லாபம் பெறுவதற்கு வாய்ப்பு இருக்கும். அதற்கு ஆவன செய்வார்களா என்று உங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியத் துணைக் கண்டத்திலேயே நெசவாளர்களுக்காக அதிக நடவடிக்கைகளை எடுத்து, அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கும் அவர்களுக்கு நூல் பிரச்சினை இல்லாமல் செய்வதற்கும், பாடுபட்ட ஒரே தலைவி, நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி ஒருவர்தான்.(மேசையைத் தட்டும் ஒலி) நீங்கள் சொல்கின்ற சங்கங்களிலிருந்து எங்களுக்கு அதிகமான நூல் தேவை என்று இதுவரையிலும் யாரும் எந்தவிதமான புகாரும் கொடுக்கவில்லை. நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள், அப்படி எந்தப் புகாரைக் கொடுத்தாலும் உடனடியாக அவர்களுக்கு அந்தந்த நேரங்களிலே கூடுதலாக நூலை வழங்கிக் கொண்டு வருகிறோம். அந்த வகையிலே இந்தச் சங்கங்கள் எங்களிடத்திலே அணுகி இப்போது கொடுக்கிற நூல் பற்றாக்குறையாக இருக்கிறது, இன்னும் தேவை என்று சொன்னால், அதற்குரிய நூலை வழங்குவதற்கு அரசு கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 193, டாக்டர் எஸ். சுந்தரராஜ், மாண்புமிகு சமூகநலம் மற்றும் கைத்தறித்துறை அமைச்சர்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

193—

நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு கட்டிடம் கட்டுதல்

* **39088—***டாக்டர் எஸ். சுந்தரராஜ் :*

மாண்புமிகு சமூகநலம் மற்றும் கைத்தறித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெசவாளர்களுக்கு குடியிருப்புகள் கட்ட நிலம் கையகப்படுத்தும் போது நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் கட்டுவதற்கும் சேர்த்து இடம் கையகப்படுத்த அரசு முன்வருமா ?

1995 ஏப்ரல் 3]

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) நெசவாளர்களுக்கு குடியிருப்புகளைக் கட்டுவதற்கு இதுவரை அரசு எந்த நிலத்தையும் கையகப்படுத்தவில்லை.

(ஆ) ஆகவே, இந்தக் கேள்விக்கு இடமில்லை.

முற்பகல் 10-55

டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, லாபத்துடன் இயங்குகின்ற கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் தறியுடன் கூடிய வீடுகளுக்கு கட்டிடம் கட்ட நிலங்கள் கையகப்படுத்துகிறார்கள். இதுபோன்ற நிலங்கள் கையகப்படுத்துகின்ற போது அந்தச் சங்கங்கள் தலைமைச் சங்கங்களுக்கு அப்பால் பல மைல்களுக்கு அப்பால் அந்த நிலத்தைக் கையகப்படுத்துகின்றார்கள். அவ்வாறு கூட்டுறவுச் சங்கங்களுடைய குடியிருப்புகளுக்கு பல மைல்களுக்கு அப்பால் நூல்கள் மற்றும் தறி போன்ற பொருட்கள் வாங்குவதற்குச் செல்கின்றார்கள். அவர்களுடைய நிலை உணர்ந்து மாண்புமிகு அமைச்சரவர்கள் இவ்வாறு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் நிலங்களை கையகப்படுத்துகின்ற பொழுது அங்கே ஒரு துணைச் சங்கம் அமைத்து, அவர்களுக்கு நூல்கள் வழங்கவும், ஒரே இடத்தில் எல்லா வசதிகளும் செய்யும்பொருட்டு அந்தந்த கூட்டுறவுச் சங்கத்தினுடைய தொகுப்பு வீடுகள் கட்டுகின்ற இடத்தில் அந்த நிலத்தைக் கையகப்படுத்த மாண்புமிகு அமைச்சரவர்கள் இனிமேல் நடவடிக்கை எடுப்பாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெசவாளர் குடியிருப்பிற்கு அரசு அந்த நிலத்தைக் கையகப்படுத்துவதில்லை. அதாவது மத்திய மாநில அரசுகளின் மூலமாக ஹட்கோ கடன் உதவியைக் கொண்டு இந்த கூட்டுறவு சங்க நெசவாளர்களுக்கு தறியோடு கூடிய வீடுகளை நாங்கள் கட்டித் தருகிறோம். அப்படி கட்டுகின்றபோது ஒவ்வொரு நெசவாளரும் ஒன்றாக சேர்ந்து அந்தக் கூட்டுறவுச் சங்கத்தில் அவருடைய வசதிக்கேற்ப நிலத்தை விலைக்குப் பெற்று, அவர்கள் உறுப்பினர்களாக உள்ள சங்கத்தின் பேரிலே அவர்கள் பதிவு செய்து கொள்ளுகிறார்கள். பரவலாக வீடு கட்டும் திட்டத்தின்கீழ் நெசவாளர்கள் சொந்தமாக சுமார் 400 சதுர அடி அவர்கள் பெயரில் வைத்திருந்தால் அந்த நிலத்தை சங்கத்தின்

பெயரில் வைக்கிறார்கள். இதிலே அவர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கின்ற அந்த இரண்டு திட்டங்களின் மூலமாக வீடு கட்டிக் கொடுப்பது, உள்ளூர் பஞ்சாயத்து, நகராட்சி, நகர ஊர் அமைப்பு இயக்குநர் ஆகியோருடைய வரைபடம், ஒப்புதலுடன் கூடிய வரைபடம் இருந்தால் மட்டுமே இந்தத் திட்டத்தின்கீழே நெசவாளர்கள் வீடுகள் கட்ட கடனுதவி வழங்கப்படுகிறது. ஆகவே அவர்கள் கேள்வி கேட்பதற்கு இதிலே இடமில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிக் காலத்தில்தான் வருடந்தோறும் 2,000 கைத்தறி நெசவாளர்களுக்கு கைத்தறியுடன் கூடிய வீடுகள் கட்டிக் கொடுக்கப்படுகின்றன. அவ்வாறு கைத்தறித் துறையில் புதுமையைப் புகுத்தி வருகின்ற மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியில் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் வாடகை போன்ற செலவுகளிலிருந்து விடுபட கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தனியாகக் கட்டிடம் கட்டிச் செயல்படுவதற்கு மாண்புமிகு அமைச்சரவர்கள் நிதியுதவிகளை வழங்கி, கட்டிடம் கட்ட நிதியை உருவாக்கித் தருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1500-க்கும் மேற்பட்ட சங்கங்கள் இருக்கின்றன. இதிலே 970-க்கும் மேற்பட்ட சங்கங்கள் நஷ்டத்திலே இயங்கிக் கொண்டிருக்கின்றன. ஆகவே அரசு அவர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கின்ற திட்டத்தை மட்டும்தான் எடுத்துக் கொண்டிருக்கிறதே ஒழிய, கூட்டுறவு நெசவாளர்களுடைய சங்கம், லாபத்திலே இயங்குகின்ற சங்கம் அரசினிடத்திலே அனுமதி பெற்று அவற்றைச் செய்துகொள்ளலாமே ஒழிய, நாங்களாக செய்து தருவதற்கு இதிலே பரிசீலனைக்கு இடமில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கே. பி. ராஜு.

திரு. கே. பி. ராஜு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய மாநில அரசுகள் மூலமாக ஹட்கோவின் சார்பாக நெசவாளர்களுக்கு வீடுகள் கட்டுவதற்கு நில ஆர்ஜிதம் செய்வதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். அப்படி ஹட்கோவிலே நில ஆர்ஜிதம் செய்து வீடுகள் மட்டும் கட்டினால், அங்கேயிருக்கின்ற நெசவாளர்கள் அத்தனைபேரும் பாவுகளை வீதிகளிலே போட்டு சரிசெய்து கொண்டிருக்கிறார்கள். ஒவ்வொரு இடத்திலும் நீளம் நீளமாக பாவுகளை

1995 ஏப்ரல் 3]

வீதிகளிலும், ரோடுகளிலும் போட்டு அதைச் சரிசெய்த பிறகுதான் நெசவாளர்கள் தங்களுடைய கைத்தறிக்குக் கொண்டுபோய் அந்த நெசவுத் தொழிலில் ஈடுபடுகிறார்கள். ஆகவே அப்படி வீடுகள் கட்டுவதற்கு நில ஆர்ஜிதம் செய்கின்றபோது பொதுவாக ஒரு இடத்தை ரிசர்வ் சைட் - போன்ற ஒரு இடத்தை இந்தப் பாவுகள் சரி செய்வதற்கு என்றே தனியாக ஒரு இடத்தை சேர்த்து ஆர்ஜிதம் செய்யப்படுமா என்பதை நெசவாளர் பெருமக்கள் சார்பாக பேரவைத் தலைவர் மூலமாக கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : இப்போது நம்மிடத்தில் தறிக் கூடத்துடன் கட்டிக் கொடுக்கக்கூடிய வீடுகளைத்தான் செய்வதற்கு வசதி இருக்கின்றது. ஆனால் மழைக்காலங்களில் நெசவாளர் இப்படிப்பட்ட பாவு போடும்போது அவர்களுக்கு ஏற்படுகின்ற சூழ்நிலையைக் கருத்தில்கொண்டு, அதற்குப் பொது இடமாக ஒன்றைத் தேர்வு செய்து, அதிலே அவர்கள் பாவு போடுவதற்கு வாய்ப்பு இருக்கிறதா என்பதை அரசு ஆய்வு செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வி. கே. சின்னசாமி.

திரு. வி. கே. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுடைய நிதியாதாரத்தை வைத்துத்தான் அவர்களுக்கு வீடு கட்டுவதற்காகக் கூடுதலாக நிலம் வாங்குகிறார்கள். அப்படி வாங்கும்போது இப்போது மத்திய அரசும் மாநில அரசும் சேர்ந்து 40000 ரூபாய்தான் வீடு கட்டுவதற்காகத் தருகிறார்கள். இது போதாது. விலைவாசிகள் ஏறிவிட்டன. கம்பி, சிமெண்ட் ஆகியவற்றின் விலைகள் அதிகரித்துள்ளன. எனவே அதனைக் கூடுதலாக்கி 60000 ரூபாயாவது கொடுத்தால்தான்...

முற்பகல் 11-00

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் முன்அனுமதியோடு வினாக்கள்–விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. வி. கே. சின்னசாமி : அப்போதுதான் அவர்களால் வீடு கட்ட முடியும் என்ற நிலை இருக்கிறது. ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதிலே மானியம் எவ்வளவு தரப்படுகிறது என்ற விவரத்தை அளிப்பாரா ? அத்துடன் இந்தத் தொகையினை ஒரு வீடு கட்டுவதற்கு 60000 ரூபாயாக உயர்த்துவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கு ஹட்கோ கடன் மூலமாக 15400 ரூபாய் வழங்கப்படுகிறது. மத்திய அரசு மானியமாக 14000 ரூபாயும் மாநில அரசு 5000 ரூபாயும் வழங்குகின்றன. இப்போது இதை ஏற்றித் தருவது என்பதைப் பொறுத்தவரையில் மத்திய அரசுதான் செய்யவேண்டும். ஆகவே மத்திய அரசோடு இதைப்பற்றிக் கலந்து பேசி மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் உத்திரவின்பேரில் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. செ. து. வரதராஜன்.

திரு. செ. து. வரதராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய-மாநில நெசவாளர்கள் மாதிரி கிராமம் என்கிற ஒரு திட்டத்தின் கீழ் எனது தொகுதியில் உள்ள விளாகம் என்ற கிராமத்தை எடுத்திருக்கிறார்கள். நெசவாளர்களுக்காகக் குடியிருப்புக் கட்டடம் கட்டுவதற்காகவும், நெசவாளர்கள் சங்கம் கட்டுவதற்காகவும் இடத்தைக் கையகப்படுத்தி இருக்கிறார்கள். ஆனால் கிராம வளர்ச்சி என்கிற காரணத்தைக் காட்டி கிராமத்தில் இருக்கின்ற சிலர் இதை தடை செய்கிறார்கள். எனவே அரசு இந்த இடங்களை மீண்டும் பெற்று இந்தக் கட்டடங்களைக் கட்டுவதற்கு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு கிராமத்தில் இருக்கின்ற பொதுமக்கள் முழுமையாக ஒன்றை எதிர்த்தால் அதற்கு எதிராக ஒன்றைச் செய்யவேண்டும் என்று மாண்புமிகு முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் விரும்ப மாட்டார்கள். ஆனால் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் சொல்கிற கோரிக்கையைப் பரிசீலித்து அதன்பேரில் நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 194, திரு. சி. ஞானசேகரன் இருக்கையில் இல்லை, அவருக்குப் பதிலாக திரு. ஓ. எஸ். அமர்நாத் கேட்கிறார். மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்.

194—

மாவட்டந்தோறும் திரைப்படக் கல்லூரி துவங்குதல்

***40025**—திரு. சி. ஞானசேகரன் :*

மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—